# அபிநயப் பாடல் தொகுப்பு




தொகுப்பாசிரியர்
திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
ஆரம்பித்து 10வது ஆண்டு (2009)
நிறைவு பூர்த்தியாவதை இட்டு
எம் கல்லூரித் தாய்க்கு இந்நூலைச்
சமர்ப்பணம் செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| இதழின் பெயர் | : | அபிநயப்பாடல் தொகுப்பு |
| தொகுப்பாசிரியர் | : | திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா |
| பதிப்புரிமை | : | திரு.ம.இ.நரேந்திரா |
| வெளியீடு | : | திரு.ம.இ.நரேந்திரா |
| பதிப்பகம் | : | கரிகணன் பிறிண்டேர்ஸ்,<br>424, காங்கேசன்துறை சாலை,<br>யாழ்ப்பாணம்.<br>தொ.பே: 021 222 2717, 4590123 |
| விலை | : | 150 /- |

| | | |
|---|---|---|
| Name of Jurnal | : | Action songs |
| Copy Rights | : | Mr.M.R.Narendra 2008 |
| Printers | : | Harikanan Printers |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே......


| | | |
|---|---|---|
| 1. | வாழ்த்துச்செய்தி | iii- viii |
| 2. | என்னுரை | ix-xi |
| 3. | ஆரம்பக்கல்வி மேம்பாட்டில் .... | xii-xvi |
| 4. | கற்பித்தலில் இசையின் முக்கியத்துவம் | xvii |
| 5. | அபிநயப்பாடலைக் கற்பிக்கும்பொழுது | xviii |
| 6. | அபிநயப்பாடலுக்கான அபிநயம்.... | xix |
| 7. | அபிநயப்பாடலுக்கு அபிநயம் அமைக்கும்... | xx |
| 8. | பாவை | 01 |
| 9. | பட்டாம்பூச்சி | 02-03 |
| 10. | கன்றுக்குட்டி | 04 |
| 11. | சின்னச்சின்னப் பாலர் | 05-06 |
| 12. | குதிரைப்பாட்டு | 07 |
| 13. | பாப்பா பாட்டு | 08 |
| 14. | பூந்தோட்டம் | 09 |
| 15. | மோட்டார்காரப் பாட்டு | 10 |
| 16. | பொம்மை | 11-12 |
| 17. | இயற்கைக் காட்சி | 13-14 |
| 18. | மாம்பழம் | 15 |
| 19. | பட்டுக்குடை | 16 |
| 20. | பூனைக்குட்டி | 17 |
| 21. | பட்டம் ஏற்றல் | 18 |
| 22. | நாய்க்குட்டி | 19 |
| 23. | இனிய உலகம் படைத்திடுவோம் | 20-21 |
| 24. | புயல் மழை - நிஷா | 22 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீடாதிபதியின்

# வாழ்த்துச் செய்தி



மழலைகளின் மகிழ்வை மேன்மையுறச் செய்வதில் இன்று அபிநயப்பாடல்கள் அதிகளவிற் செல்வாக்குச் செலுத்துவதை நாம் காண்கின்றோம். கல்விச் செயற்பாடுகளை ஆடல் பாடல்களுடன் மேற் கொள்வதில் ஆசிரியர்களும் அக்கறை காட்டி வருகின்றனர்.

அபிநயப் பாடல்கள் எழுத்துருவிற் பல கவிஞர்களாற் படைக்கப்பட்ட போதிலும் அவை தொகுக்கப்படாமல் குரு சீட பரம்பரையாகப் பேணப்பட்டு வந்த தன்மையைக் காண்கின்றோம். இவ்வாறு காணப்பட்ட அபிநயப் பாடல்களைத் திருமதிவி.நரேந்திரா அவர்கள் தேடித் தொகுத்துள்ளார். அத்துடன் தேடித் தொகுத்த பாடல்களைச் சிறந்த முறையில் இசையமைத்துப் பாடியுள்ளார். அப்பாடல்களுக்கு ஏற்ற அபிநயங்களை மாணவர்களால் அபிநயப்பித்து இறுவெட்டாக வெளியிடுகின்றார். அச்சுருவில் வெளிவரும் பாடல்கள் இறுவெட்டில் ஒலி, ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளமையால் மாணவருக்கும், ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கும் மிகவும் பயனுடையதாக அமையும். எந்தச் செயற்பாடும் கவர்ச்சியாற்றல்களுடன் மேற்கொள்ளும்போது அதன் பயனுறுதி மிகையாகும் என்பதில் ஐயமில்லை.

திருமதி வி.நரேந்திராவின் ஆற்றல் இவ் இறுவெட்டு வெளியீட்டினால் மட்டுமல்ல; கல்விக் கல்லூரியில் இவரது செயற்பாடுகள் அனைத்திலும் நாம் கண்டதே, இவரது அபிநயப் பாடற் தொகுப்பினையும் இறுவெட்டு வெளியீட்டினையும் வாழ்த்தி, இவருடைய செயற்றிறன் மேலும் வளர ஆசி கூறி அமைகின்றேன்.

திரு.எஸ்.கே.யோகநாதன்
பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது பீடாதிபதியின்
# வாழ்த்துச் செய்தி



கல்வியியற் கல்லூரியின் சங்கீதத்துறை, பொறுப்பு விரிவுரையாளர் திருமதிவிக்கினேஸ்வரி நரேந்திரா அவர்களின் "அபிநயப் பாடல் தொகுப்பு" நூலுக்கும் இறுவெட்டுக்கும் ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சங்கீதத்துறை சார்ந்த அழகியலுணர்வு மனிதப் பண்புகளை வளர்க்கும். இந்த வகையில் அழகியலுணர்வை வழங்கும் அபிநயப்பாடல்கள் தொகுக்கப்பட்டு நூலாக்கமாக வெளிவருவதோடு, இறுவெட்டாகவும், வெளிவருவதும் பாராட்டப்பட வேண்டியதாகவுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், இந்நூலும் இறுவெட்டும் பெரிதும் உதவும்.

மாணவர்களுக்கு இயைபாக்கத்தை ஏற்படுத்திச் சமநிலை ஆளுமை கொண்டவர்களாக ஆக்கும் கல்விச் செயன்முறையில் முதன்மையாக உள்ளது சங்கீதத்துறையாகும். இப்பாடத்துறையை மாணவர்களும் ஆசிரியர்களும் கற்பதன்மூலம், மனிதர்களிடையே இயல்பாகக் காணப்படும். இரசித்தல் திறன், ஆக்கத்திறன், வெளிப்படுத்தும் திறன், ஏனையவர்களின் உணர்வுகளை மதிக்கும் மனப்பாங்கு என்பன விருத்தியாகும். இது இன்றைய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எதிர்கால சமூகத்தினருக்கும் தேவையான ஒன்றாகும். இத்தேவையை நிறைவு செய்யும் ஒரு ஊடகமாகவும் இத்தொகுப்பு உள்ளது.

பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்ட இந்தத் தொகுப்பு நூலாக்க முயற்சியில் ஈடுபட்ட நூலாசிரியர் திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா அவர்களிற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன்
நாயன்மார்கட்டு நல்லூர்.
முதாவது பீடாதிபதி,யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.
நிபுணத்துவ ஆலோசகர், கல்வி அமைச்சு, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உப பீடாதிபதியின்
# வாழ்த்துச் செய்தி



அழகியற் கலைகளை இரசித்தல் இன்பத்தைத் தோற்றுவிக்கின்றன. அழகியல் நிகழ்வுப் புலங்களால் ஒருவருள் ஏற்படும் மானசீகமான திருப்தியும் இன்பமும் இரசித்தலாகப் பரிண மிக்கின்றது. இன்பத்தைத் தோற்றுவிக்கும் ஆற்றல், உலகில் எல்லாப் பொருட்களுக்கும், செயல்களுக்கும் கிடையாது.

ஆனால், அழகியல்கலைகளுக்கு இன்பத்தைத் தோற்றுவிக்கவும் அதனூடாக மனித ஆளுமையை விருத்தியாக்கும் சக்தியுள்ளது. இச்சக்தியை ஆற்றுப்படுத்தும் நோக்கில் "அபிநயப்பாடல் தொகுப்பு" என்ற இவ் ஆக்கமும் இறுவெட்டும் எமது கல்வியியற் கல்லூரியின் இசைத்துறைத் தலைவர் திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ் ஆக்க உருவாக்கச் செயன்முறை சங்கீதப்பாடத்தினூடாக மாணவர்களிடையே இரசனை இன்பத்தை, அதனூடாக இரசிப்பை, சமநிலை ஆளுமையை விருத்தியாக்க முயல்கின்றது. சங்கீதக்கலை உளஆற்றலை மேம்பாடடையச் செய்கின்றது. அறிந்து ஓதுதல், தெளிந்து ஓதுதல், இறையுணர்வோடு ஒன்றிணைந்து ஓதுதல், பாக்களைப்பாடுதல் என்பவை சங்கீதக்கலையின் பரிமாணங்களின் ஒன்றிணைப்பினூடாக முகிழ்கின்றன. முகிழ்ப்பில் இலயிக்கின்ற மாணவர்கள் ஒருவகை நெறிப்படுத்தலுக்கான ஆற்றுகைக் கல்வியைப் பெறுகின்றார்கள்.

இவ் விருத்திக்கு வழிகாட்டும் "அபிநயப்பாடல் தொகுப்பு " எனும் நூலினை ஆக்கிய திருமதி வி.நரேந்திரா அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர். அவருடைய இத்துறை சார்ந்த அனுபவங்கள், ஆற்றல்கள் ஆழ்ந்தபுலமை அறிவு, செயலாற்றுகைத்திறன், மாணவர்களுடன் சங்கமமாகி அவர்களை கற்றலுக்கு இசைவாக்கும் ஆற்றல்களின் வெளிப்பாடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இந்நூலின் விசேட அம்சம் பாடல்கள் மிகச்சிறந்த முறையிற்காட்சியுடன் கூடிய இறுவெட்டாக வெளிவருவதாகும். இன்றைய நவீன தொழில்நுட்ப உலகிற்கு ஒத்தவிதத்தில் இவ் ஆக்கம் வெளிவருவது மேலும் சிறப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. இவ் இறுவெட்டுப் பாடல்களிற் குரல் கொடுத்து அற்புதமான ஆக்கமாக வெளியிட்டிருக்கும் திருமதி நரேந்திரா அவர்களைப் பாராட்டி, தொடர்ந்து அவர் புதிய இத்துறை சார்ந்த ஆக்கங்களை வெளியிட இறையருள் துணை நிற்பதாக.


பாலசுப்பிரமணியம் தனபாலன்
(B.A.(Cey);PGDE,(Merit) Dip.in Ed,
M.Phil. in Education, Psy
உபபீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபரின்

# வாழ்த்துச் செய்தி



அபிநயப்பாடல் தொகுப்பு என்ற நூலிற்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் நிறைவும், மகிழ்ச்சியுமடைகிறேன். கலைப் பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாக்கும் புகழ்மிக்க கல்விக்கூடமான இராமநாதன் கல்லூரியில் உருவாகிய திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா, தனது இசைப்புலமையினாற் கல்லூரிக்குப் பெருமையைத் தந்து கொண்டிருப்பவர். பல வெற்றிக்குப் பின்னால் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பவர்.

மனதைத் தூய்மைப்படுத்தி, உள்ளத்தைச் செந்நெறிப்படுத்தும் இசைக் கலை வாயிலாகவே கல்வியின் இலக்குகளை அடையலாம். சேர்.பொன். இராமநாதனவர்களின் சிந்தனைக்கு இந்நூல் வெளியீட்டின் மூலம் கல்லூரி மாணவி உயிர் கொடுத்துள்ளார்.

பாடல்களைத் தொகுத்து, பழமையில் புதுமையைப் புகுத்தி, வளர்ச்சி யடைந்து கொண்டுவரும் சமூகத்தின் எதிர்பார்ப்பினை நிறைவு செய்துள்ளமை பாராட்டிற்குரியதாகும். இசையின் அகத்தோற்றத்தையும், புறத்தோற்றத்தையும் அதன் வடிவிலேயே வெளிக்கொணர்வது எல்லாக் கலைஞர்களாலும் இயலுமானதொன்றல்லாகும். ஆனால், தன்னை முற்றாக இணைத்து அர்ப்பணித்து, கல்லூரி நிகழ்வுகள் பலவற்றின் வெற்றிக்கு வழி அமைத்த திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா போன்ற கலைஞர்களினாற்றான் இப் பணியையும் நிறைவேற்ற முடியும்.

காலத்தின் வேகமும் விஞ்ஞான தொழில்நுட்பங்களின் வளர்ச்சியும் பாரம்பரியக் கலைகளிலும் செல்வாக்குச் செலுத்துவது தவிர்க்க முடியாததாகும். நவீன இசைக் கருவிகளும் இசைக் கலையிற் பாரிய எழுச்சியினைக் காட்டிவருகின்ற நிலையில், இவர் தன்னையும் இணைத்துத் தனது ஆளுமையை வெளிப்படுத்தியுள்ளார். அவரது இசைப்புலமையும், புதிய சிந்தனையும் இத்தகைய வெளியீட்டுக்குக் காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியியற் கல்லூரியின் இசை விரிவுரையாளராக, திருமதி விக்கினேஸ்வரி நரேந்திராவின் சாதனைகளுக்குப் பலமான களம் அமைந்திருப்பது அவரது திறமையை வெளிக்கொணர வாய்ப்பாகும். நல்ல நோக்கம், நல்ல சிந்தனை, தேவைக்கேற்ற நன்முயற்சி.

எதிர்காலத்தில் மேன்மேலும் இளைய தலைமுறையின் தேவைகளுக்கேற்ப நல்ல இசையாக்கங்கள் பலவற்றை வெற்றிகரமாக வழங்க ஆடல் வல்லாளனைப் பிரார்த்தித்து மனப்பூர்வமான எனது வாழ்த்துக் களைத் தெரிவிக்கின்றேன்.

திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்
அதிபர்,
யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



கல்விப் புலத்தில் முதன்மை பெறுவது ஆரம்பக் கல்வியே. வளரும் பயிருக்கு வாழ்வளிக்கும் ஆதாரம் ஆரம்பக் கல்வி. ஆரம்பக் கல்வியில் ஆடல், பாடல், தேடல், விளையாட்டு என்ற நெறிமுறையிலேயே கல்வி வழங்கல் இடம்பெறும். பாலப் பருவத்துப் பச்சிளங் குழந்தைகள், பாடசாலையை விருப்பத்துக்குரிய இடமாகக் கருதி நாடுவதற்கு நவீன கல்வியாளர்களும் விளையாட்டுடன் கூடிய கல்வியே வெற்றிதரும் என்கிறார்கள்.

எம் மண்ணில் மிக நீண்ட காலமாக ஆரம்பக் கல்வி வழங்கலில் ஆடல், பாடலுடன் கூடிய அபிநயத்தைப் பயன்படுத்திக் கல்வி புகட்டும் வழக்கம் நிலைபெற்று வந்துள்ளது. குழந்தைகளுக்கான ஆடல் பாடல் தனித்துவமானது. கடுஞ்சொற்களின்றி ஓசை நயத்துடன் ஒன்றிக்கச் செய்தல் குழந்தைகளுக்கான பாடலில் முக்கிய அம்சமாகும். "குழந்தை உளவியல், குழந்தைப் பாடலை இயற்றுபவரிடம் செயற்படாவிடிற் குழந்தைப் பாடல் தோல்வியைச் சந்திக்கும் " எனப் பேராசிரியர் கா.சிவத்தம்பி குழந்தைப் பாடல்கள் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ளார். பெரும் புலவர்களாக விளங்கிய பாவலர்கள் பலர்" குழந்தைப் பாடல்" படைப்பில் தோல்வியைச் சந்தித்துள்ளனர். காரணம், அதீத புலமையில் நின்று குழந்தைகளுக்குப் பா சமைப்பது பொருந்தாது. அரவணைப்பு நிலையில் நின்று பிள்ளைக்குக் கவி சமைத்தவர்களே குழந்தைப் பாடல்களில் வெற்றி கண்டனர்.

ஈழத்திற் குழந்தைப் பாடற் படைப்பாளிகள் மிகவும் குறைவு. எனினும் குழந்தைகளுக்காகப் பாடல் எழுதி அவற்றுக்கு இசை நயமுங் கொடுத்து வெற்றி கண்டவர்களும் உள்ளனர். ஈழத்தில் சில மழலைப் பாடல்கள் யாரால் தோற்றுவிக்கப்பட்டது என அறியாத நிலையில் வாய்மொழி மரபாக, செவிவழியூடாக பயன்பாட்டில் நிலைபெற்ற பாடல்களும் உள்ளன. இந்நூலில் ஆரம்ப வகுப்புகளிற் கற்கும் மாணவர்களுக்கு அபிநயத்தோடு கற்றுக் கொடுப்பதற்கான சிலபாடல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு; அவற்றுக்கான இசைவடிவமும் கொடுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிநயத்தினூடாக எவ்வாறு இப்பாடல்களைத் துலங்க வைக்கலாம் என்பதற்கான வழிகாட்டலில் இப்பாடல்களுக்கான இறுவெட்டும் வெளியிடப்படுகிறது. காலத்திற்கு உகந்த பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளது. இந்நூல் ஆரம்பக் கல்வி வகுப்பறைக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கும், தம்பிள்ளையைத் தாமே அரவணைத்துக் கற்பிக்கும் தாய்மாருக்கும், மாணவருக்கும் மிகவும் பயனாக அமையும் என்ற நோக்கோடு தொகுத்தளிக்கின்றேன்.

இத்தகைய முயற்சியில் யான் ஈடுபடுவதற்கு எமது கல்வியியற் கல்லூரியின் மதிப்பிற்குரிய பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அவர்களே மூலகர்த்தா அன்றாட அறிவுரைகளின் போது ஒவ்வொரு விரிவுரையாளரும் புதியனவற்றைத் தேடவேண்டும், தேடலினால் அறிவுக் கையளிப்புக்களைச் சிறப்பாக மேற்கொள்ளலாம். என வலியுறுத்தி எம்மை வழிப்படுத்தியவர் எம் பீடாதிபதி.

கல்வியாளர்கள் எந்நேரமும் கல்வி முயற்சியில் ஈடுபடவேண்டும், தம் துறை சார்ந்த விடயங்களில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி, ஆற்றல்களை வளர்க்கவேண்டும் என்ற பணிவான அன்புக் கட்டளையை இடுபவர் எம் முதலாவது பீடாதிபதி, கலாநிதி தி.கமலநாதன் அவர்கள். அவர்களின் ஆற்றுப்படுத்தல் என்னை இத்தகைய முயற்சியை மேற்கொள்ளத் துணையாக இருந்தமையை யான் என்றும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

யான் உற்சாகமாக அபிநயப் பாடல்களைத் தேடிப் பாடி ஆடி அனுபவித்து எழுத எனக்கு உதவியோர் பலர். அகவை எண்பது கண்ட என் தாயார் திருமதி சரஸ்வதி ஆறுமுகம் ஓய்வுபெற்ற நல்லாசிரியை. 37 வருடகால ஆசிரிய சேவையிற் பல்லாயிரம் சிறார்களை அபிநயப்பாடல்களால் வழிப்படுத்தி நிறைவு கண்டவர். இன்றும் இனிய இசையுடன், அபிநயத்துடன் பல பாடல்களைப் பாடும் இயல்பை இறைவன் அவருக்கு அளித்துள்ளார். அவருக்கு என் நன்றிகளைத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

என்னை உருவாக்கிய யாழ். இராமநாதன் கல்லூரியே இசைச்சுடரிலும் நான் ஈடுபடுவதற்கு காரணமாக அமைந்தது. ஆரம்பக்கல்விப் பருவத்திலே என்னை இசைத்துறையில் ஈடுபடுத்தியவர் என் இசைக்குரு அமரர் செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகாம்பிகை செல்லையாப்பிள்ளை அவர்கள். அவர்களின் அரவணைப்பும் ஆசியும் அயராமுயற்சியுமே என்னை இசைவல்லுன ராக்கியவை என்பது யதார்த்தமான உண்மை. அமரர் உலகில் இருந்தும் என் குரு என்றும் என் இசைமுயற்சிகளுக்கு ஆசிவழங்கிக் கொண்டு இருப்பார் என் உள்ளார்ந்த நம்பிக்கை என்பது யானும் எனது நாளாந்த இசைச் சேவைகளின் போதும் என் குருவை மனமார வணங்கியே சேவை யாற்றுகிறேன்.

இப்பாடல் என் முகிழ்நிலை மாணவர்களுக்குக் கற்பித்தவேளை, என் கற்பித்தலை அவதானித்த உப பீடாதிபதி திரு.பா.தனபாலன் அவர்கள் இனிய பாடல்களைத் தொகுத்து வெளியிடவேண்டும் என ஆலோசனை கூறினார். அவரது ஆலோசனையும் இத்தொகுப்பு வெளியீட்டிற்கு ஆரோக்கியமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறந்த இவ் இசைப்பாக்களுக்கு என் சக விரிவுரையாளர் திருமதி. ஞானசக்தி கணேசநாதன் எழில்மிகு அபிநயங்களை மாணவர்களுக்குப் பயிற்சியளித்து, இறுவெட்டு சிறப்பாக அமைய வழிசமைத்தார். அவரது ஆலோசனையும் வழிகாட்டலும் என் வளர்ச்சிக்கு என்றென்றும் பயனுடையவையே.

என் சகலமுன்னேற்றத்திற்கும் ஒத்தாசை வழங்கி உறுதுணையாகத் திகழ்ந்தவர் எனது கணவர் திரு.ம.இ.நரேந்திரா அவர்களுக்கும் எனது மனம்நிறைந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

அழகுற வடிவமைத்து அபிநயப்பாடல்கள் உங்கள் எல்லோர் கைகளிலும் தவழ வழிவகுத்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கு என் மனமார்ந்த நன்றிகள் என்றும் உரித்தாகட்டும்.

அபிநயப்பாடல்களைச் சிறந்த முறையில் ஒலிப்பதிவு செய்து வழங்கிய திரு.அ.கேதீஸ் மனோரம்யமானமுறையில் ஒளிப்பதிவு செய்துதவிய கல்வியியலாளர் திரு.ரட்ணேஸ்வரன் ஆகியோருக்கும் என் மனம் நிறைந்த நன்றிகள்.

கலையார்வத்துடன் நிகழ்வின் அபிநயங்களை எல்லோர்மனமுங் கவரும் வண்ணம் நிகழ்த்திய என் அன்பான மாணவச் செல்வங்கள், மழலைகள் அனைவருக்கும் என் இதயபூர்வமான நன்றிகளுடன் நிறைவுபெறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக்கல்வி மேம்பாட்டில் அழகியல் திறன்களின் முக்கியத்துவம்

"சுதந்திரமான வெளிப்படுத்துதல் உருவாவது சுதந்திரமான பிள்ளைகளிடம் இருந்தாகும். பிள்ளையினுள் சுதந்திரம் ஏற்படுவது பிள்ளைகளுக்குத் தனது சுற்றாடலை நன்கு கிரகித்துக் கொள்வதற்கும் அதனை மீளமைப்பதற்குப் பூரண சுதந்திரம் வழங்கப்பட்டால் மட்டுமேயாகும். பிள்ளையின் சுயாதீனத்திற்குள்ள தடைகளை நீக்கும் போது நிச்சயமாகப் பிள்ளை சுதந்திரமான வெளிப்படுத்தலில் ஈடுபடும்".

"Advanced Montessori Methods" எனும் நூலில் மரியா மொன்டிசோரி அம்மையார் எடுத்துக்காட்டிய கருத்தை நினைவுபடுத்தி ஆரம்பக் கல்வியின் அழகியற்றிறன்களை நாம் நோக்குகின்றபோது.

ஒரு மாணவனின் திறமைகளை வெளிப்படுத்துபவரில் முக்கிய பங்கு வகிப்பவர் ஆசிரியர். இந்தவகையில் ஆரம்பக் கல்வி மாணவர்களின் அழகியற்திறன்களை வெளிப்படுத்துவதன்மூலம் மாணவனுடைய இயல்பான ஆற்றல்கள் முழுமையாக விருத்தியடைவதற்கு ஏதுவாக உள்ளது.

அழகியற் கல்வியினூடாக மாணவர்களிடம் நான்கு பொது நோக்கங்களை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

1. இரசனைத் திறனை விருத்தி செய்தல்
2. கற்பனையும் ஆக்கரீதியான சிந்தனையும் விருத்தி செய்தல்
3. வெளிப்படுத்துதல் ஆற்றலை விருத்தி செய்தல்
4. ஆக்க, விமர்சன ஆற்றலை விருத்தி செய்தல்
5. பரஸ்பர ஒத்துழைப்பை விருத்தி செய்தல்

**இரசனைத் திறனை விருத்தி செய்தல்**

இரசனைத் திறனை விருத்திசெய்ய வேண்டுமாயின் முதலில் ஆசிரியர் இரசனைத்திறன் உடையவராய் இருத்தல்வேண்டும். ஆசிரியர் மாணவனிடம் இரசனையாகப் பேசுவது, அடுத்து நேரடி அனுபவம் அதாவது அனுபவத்தின்மூலம் இரசனை அடைகிறான். அது மகிழ்ச்சிகரமானதாகவோ அல்லது துக்ககரமானதாகவோ இருக்கலாம். ஆனால் இவ்வனுபவம் அவனிடத்து ஓர் இரசனையை ஏற்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக ஒரு அழகான ரோசாப் பூவை மரத்திற் பார்த்து ஒருவன் இரசிப்பான். அதே நேரம் அந்தப் பூவை ஒருவர் பறித்துத் தலையிற் சூடுகின்றபோது கோபம் ஏற்படலாம்.

இதன்மூலம் அவனிடம் ஓர் இரசனைத் தன்மை ஏற்படுவதை நாம் காணலாம். இதேபோன்று கலையாக்கங்களை இரசிக்கின்ற தன்மையினை ஏற்படுத்துவதற்கு மாணவர்களிடையே சித்திரம், சிற்பம், பாடல், அபிநயம், நாடகம், வீடியோ, குறுந்திரைப்படம் போன்றவற்றைப் பார்த்து அவற்றை இரசிக்கவும் விமர்சிக்கவும் செவிமடுக்கவும் வாய்ப்பு ஏற்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் இரசனையுடன் பாடலைப்பாடுதல், ஆடுதல், நடித்துக் காட்டுதல் போன்றவற்றினூடாக மாணவரிடம் இரசனைத் திறனை விருத்தி செய்யலாம்.

**கற்பனையையும் ஆக்கரீதியான சிந்தனையையும் விருத்திசெய்தல்**

ஒருவன் தான்பெற்ற இரசனை அனுபவத்திற் சிந்தனையைச் செலுத்தி, ஆழமாக ஆராய்ந்து விமர்சிக்கலாம். இவ்வழியில் அவன் தான் பெற்ற அனுபவங்களுக்கும் பல அர்த்தங்களைக் காணலாம். உதாரணமாக: சூழலின் அடிப்படையில் மனதில் ஒருமைப்பாடு தோன்றி மனதிற் பலவிதமான கற்பனைக் காட்சிகள் தோன்றமுடியும். அவற்றை அனுபவிக்கும் ஆற்றல்பெற்ற ஒருவன் "தான் கண்ட அழகினை அனுபவித்து, அந்த அழகினை மனப்பாடமாக்கிக் கொள்வதற்கு அவனுடைய மனத்தை ஒரு நிலைப்படுத்தும் திறன் காரணமாகின்றது" இவை பின்னர் ஆக்கத்தின் கருவாகின்றது.

இந்த ஆக்கத்திறன்கள் அவரவர் இரசனைத் தன்மையைக் காட்டும். அதாவது சாந்தமுடையதாக சலனமற்ற தன்மையுடனும், சிலருடைய ஆக்கங்கள் சலனமுடையனவாகச் சாந்தமற்றுக் காணப்படும். ஆக்கம் எனக்கூறுவது "போலச் செய்தல்" இல்லாமற் புதிய பாங்கில் ஏதேனுமொரு ஊடகத்தின் ஊடாக முன்வைக்கப்படும் சுயாதீனமான வெளிப்படுத்துதலையே ஆகும். இசை, அசைவு, நடிப்பு எனும் செயற்பாடுகள் "ஆக்கம்" எனும் சொல்லினால் விசேடப்படுத்தப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகியலுணர்வு ஆக்கத்திறன்களையும், மனிதப் பண்புகளையும், ஆளுமையையும் வளர்ப்பதாக "ரவீந்திரனாத் தாகூர்" தெரிவிக்கின்றார். அழகியற் கலைகளை இரசித்தல், இன்பத்தையும், ஆக்கத்திறன்களையும் தோற்றுவிக்கின்றன.

1. கருத்து வெளிப்பாடு
2. கலைப்பொருள் உற்பத்தியிற் புதிய பொருளைக் கண்டுபிடித்தல்
3. புதுக்கண்டுபிடிப்பு

இப்படியான பலவகைச் செயற்பாடுகள்மூலம் ஆக்கத்திறன்களை விருத்திசெய்யலாம்.

**வெளிப்படுத்துதல்: ஆற்றலை விருத்தி செய்தல்**

மாணவர்களின் திறனை வெளிப்படுத்தலும் விருத்தி செய்தலும் பற்றி நாம் பார்க்கின்றபோது "பென்ஸ்சீரெக் சுய வெளிப்படுத்தலை ஊக்குவித்தல் பிள்ளையின் இயல்பான ஆக்கத்திறனை மேம்படுத்துவதற்குக் காரணமாக அமையும்" என்கிறான்.

**அழகியற் கல்வி சார்ந்த வெளிப்பாடுகள்**

1. உடல், அங்க அசைவு மூலமாகப் பிள்ளையினுடைய வெளிப்பாடு: நர்த்தன அசைவு எனப்படும்.
2. சப்தத்தையும் , நாதத்தையும் கொண்டு பிள்ளை செய்யும் சுய வெளிப்பாடு: இசை எனப்படும்.
3. கீறல், கிறுக்கல், நிறங்களினாற் பிள்ளை செய்யும் சுயவெளிப்பாடு: ஓவியம் எனப்படும்.
4. பலவகைப்பட்ட அபிநயப் பண்புகளைக் கொண்டு பிள்ளை செய்யும் சுய வெளிப்பாடு: நடிப்பு எனப்படும்.
5. பலவகைப்பட்ட திண்மப் பொருட்களாகிய களிமண், குரும்பட்டி, மண் போன்றவற்றின்மூலம் வெளிப்படுத்தும் ஆக்கம்: சிற்பம் எனப்படும்.

சுயவெளிப்பாட்டை வேறுபடுத்திக் காட்டுவதற்கு வழமையாக "சிருஷ்டி" என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம். பாவனை பண்ணாது புதிய நோக்குடன் ஏதாவது ஒரு ஊடகத்தின் மூலம் பிள்ளை முன்வைக்கும் சுதந்திரமான வெளிப்பாட்டை சாதாரண ஆக்கமென்று நாம் கருதுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிள்ளையின் வெளிப்படுத்தும் ஆற்றல்களின் விருத்திக்கு மிகவும் பிரயோசனப்படுவது, வளர்ந்தோரும், பிள்ளையும், சமமான நிலையில் உள்ள நட்புறவான தனியாளிடைத் தொடர்பொன்று நிலவும் சுற்றாடலொன்றாகும்" என மேபர் கூறுகிறார்.

பிள்ளையின் திறமையைத் தைரியப்படுத்திச் சுதந்திரத்தன்மை, ஒத்தாசை வழங்குகின்றபோது பிள்ளையின் வெளிப்பாட்டு ஆற்றல் விருத்தி அடைகின்றது.

**ஆக்க விமர்சன ஆற்றலை விருத்தி செய்தல்**

ஆசிரியரிடமும் மாணவர்களிடமும் சுதந்திரமான கருத்துப்பரிமாற்றம் ஏற்படுகின்றபோது நல்ல ஆக்க விமர்சன ஆற்றலை விருத்தி செய்யலாம். நல்லது கெட்டதை எடுத்துக்கூறல், ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கை ஏற்படுத்தல், சமூகத்திற் பரவலாக நிகழும் அழகியல் விழுமியங்களையும் அளவு கோல்களையும் பிள்ளை விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருக்குமாறு அறிமுகப்படுத்துதல், பிள்ளையின் புலனுணர்வை மேம்படுத்தும் செயல்வழிகளினால் அழகியற்கல்வி ஆரம்பிக்கப்படல் வேண்டும் எனக்கூறுதல் சரியானதாகும்.

மாணவர், ஒரு நிகழ்வின் முடிவில், தன் மனதிற் பட்டதை விமர்சிக்க ஆசிரியர் சந்தர்ப்பம் கொடுக்கும்போது அந்நிகழ்வின்பயன் மேலும் மேன்மை அடைகிறது.

உலகின் புதுமைகளுக்கும், அதிசயங்களுக்கும், பிள்ளையின் மனதைத் திறந்துவிட வேண்டும். அவதானிப்பிற்கும், துருவியாய்தலுக்கும் முன்னர், மகிழ்ச்சியடைதலுக்கும் புலன்களை ஆயத்தப்படுத்தும் முகமாகக் கற்பனை, சிந்தனைகளுக்குப் பிள்ளையை வழிப்படுத்துதல் முக்கியமாகும்.

அவ்வாறே, செயற்பாட்டின் முடிவிற் செய்யும் கலந்துரையாடல்மூலம் விமர்சன ரீதியாகச் சிந்திப்பதற்குப் பிள்ளைகளை வழிப்படுத்தலாம். விமர்சன ரீதியான சிந்தனை முறைகள், சிந்தனைப்பருவத்தின் ஒரு பண்பாகும். விமர்சன ரீதியான சிந்தனை விருத்தியடைவதற்குப் பிள்ளை சுயமையத் தன்மையிற் கைவிடுதல் அவசியமான காரணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரஸ்பர ஒத்துழைப்பை விருத்திசெய்தல்**

ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே கலந்துரையாடலையும் ஊக்குவிக்கவேண்டும். பிள்ளையின் இரசனைத் திறன்களின் விருத்தி தொடர்பான விடயங்களைக் கண்டுபிடித்தல், ஆக்கமதிப்பீட்டைவிடக் கடினமான காரியமாகும். இது பிள்ளையின் நடத்தைக் கோலம், உருவமாகல் போன்றவற்றை அவதானிப்பதன் மூலமும், பிள்ளையுடன் கலந்துரையாடுவதன் மூலமும் மறைமுகமாகக் கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

வெளிப்படுத்தலின்போது பிள்ளைகள் காட்டும் தனியாள் வேறுபாடுகள் பற்றி மதிப்பீட்டின்போது கவனஞ்செலுத்த வேண்டும். இவற்றின் மூலம் பரஸ்பர ஒத்துழைப்பை விருத்தி செய்யலாம்.

இந்தவகையில் ஆரம்பக் கல்வியில் அழகியலூடாகத் திறன்களை விருத்தி செய்தல் ஒரு முக்கிய விடயமாகும்.

'அழகியல்; வாழ்க்கைச் சக்கரத்தின் அச்சாணி'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பித்தலில் இசையின் முக்கியத்துவம்

இசை எவரையும் இசைவிக்கும். மனித வாழ்வோடு இசை இரண்டறக்கலந்துளது. குழந்தை இப்பூவுலகிற் பிறந்ததுமுதல், பல்வேறு இசைகளைக் கேட்டே இசைந்து வாழ்கிறது. அடம்பிடித்து அழும் குழந்தையை ஆறுதற்படுத்துவதும் இசை. மகிழ்வாகத் தூங்க வைப்பதும் இசை. தூக்கத்திலிருந்து மகிழ்வோடு விழிக்க வைப்பதும் இனிய இசை. இசைக்கு வசப்படும் தன்மை குழந்தைக்கு இயல்பானதே. அத்தகைய இயல்புடைய குழந்தையைப் பல்துறை ஆற்றலுள்ள ஆளுமைமிக்க முழுமனிதனாக்கப் பல அனுபவங்களை, அறிவை, வழங்கவேண்டியது கல்வியுலகின் கட்டாய கடமை. கல்வியுலகு குழந்தையைக் கற்றற் செயற்பாட்டில் மகிழ்வோடு ஈடுபடுத்த உதவும் முக்கிய கருவியும் இசையே. இந்த இசை பிள்ளையின் உடல் உளவிருத்தியை மேம்படுத்தவல்லதாக அமைதல்வேண்டும். பிள்ளையின் உடல், உளவிருத்தியை மேம்படுத்த பொருத்தமாக அமைபவை இலகுவான இசையமைப்புடன் கூடிய அபிநயப்பாடல்களே, இலகு மொழியிற் குழந்தைகள் உற்சாகமாகப் பாடத்தக்க தாளக்கட்டுடன் அபிநயப்பாடல்கள் அமைதல்வேண்டும். அபிநயப் பாடல்கள் மூலம் குழந்தைக்கு மொழிவிருத்தியை, கணித விருத்தியை, எண்ணக்கரு விருத்தியைப் படிப்படியாக மேம்படுத்தலாம். ஆடிப்பாடி அறியும் விடயங்களாற் குழந்தை கல்வியைச் சுமையின்றிக் கற்கும். கல்வியே சுகமான அனுபவமாகி விருப்போடு கற்கத் தூண்டும். அபிநயப் பாட்டினூடே அன்பை உணர்த்தலாம். பக்தியை விதைக்கலாம், உயர் பண்பை உணர்த்தலாம், கடமைகளை உணர்த்தலாம், கால ஓட்டங்களை உணர்த்தலாம், காணவிளையும் ஏற்ற நாட்களை உணர்த்தலாம். களிப்போடு கம்பீரமாக முன்னேற வைக்கலாம். சமூகச் சாவல்களுக்கு முகங்கொடுக்க வல்ல முழுமனிதனை உருவாக்கும் கல்விச் செயற்பாட்டிற்கு அழகான, அசையாத அத்திவாரம் அபிநயப் பாடல்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிநயப்பாடலைக் கற்பிக்கும் பொழுது

- அபிநயப்பாடல் கற்பதற்குமுன் உடற்பயிற்சி கொடுத்தல்.

  உ+ம் :- துள்ளுதல், ஓடுதல், கண் அசைத்தல், வளைதல்.
- மிருகங்கள், பறவைகளின் ஓசைகளை மாணவர்களின் மூலமாக வெளிப்படுத்துதல்.
- குரலைக் கட்டுப்படுத்தும் ஆற்றல்
- பாடலுக்கேற்பத் தாளம் போடுதல்
- இலகுவான கருவிகளைக் கையாளும் ஆற்றல்
- திஸ்ர, சதுஸ்ரநடைகளில் மாணவர்களை நடக்க விடுதல், கைதட்டுதல்.
- இலகுவான வகையில் இசை அமைத்தல்.
- புத்தளிப்புக் கருவிகளுடன் இசைத்தல்.
- சிறிய பாடல்களை ஆக்கி, இசை அமைத்தல்
- ஆசிரியர் பாடலை அழகாகப் பாடிக்காட்டுதல்
- பாடலின் விளக்கம் கொடுத்தல்.

  உ+ம்: மிருகங்கள், பறவைகள், எமக்குதவுவோர் என்றவகையில் விளக்கம் கொடுத்தல்.
- பாடலைப் பகுதி பகுதியாகக் கற்பித்தல்.
- மாணவரும் ஆசிரியருடன் இணைந்து பாடுதல்
- சுயமாக அபிநயம் செய்யவிடுதல்
- பின்வழிகாட்டலில் இயங்குதல்
- பின்பாட்டுடன் குழுவாக இயங்கவிடுதல்
- பாடலுக்கேற்பத் தாளக் கருவிகள் பயன்படுத்துதல். சிரட்டை, சல்லாரி என்பன உபயோகிக்க.
- பின் அவைக்காற்றுகையில் மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிநயப்பாடலுக்கான அபிநயம் அமைக்கும் முறை

நல்லதொரு கருத்துமிக்க அபிநயப் பாடலைத் தெரிவு செய்தல் அப்பாடல் புலப்படுத்துகின்ற கருத்தை நன்கு அவதானித்து அவற்றிலே கூறப்படும் கருத்துக்கள், இயற்கைச்சூழல், அறம், ஒழுக்கம், சுகாதாரம், விழுமியம், பண்பாடு, அறிவியல் போன்றவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றதா என ஆசிரியர் இனம்கண்டு, அந்நிலைமைகளுக்கு ஏதுவான மாணவர்களினால் இலகுவாயும், விருப்புடனும், மகிழ்வுடனும் அபிநயம் செய்யத்தக்க வகையில் அபிநயம் அமைக்கவேண்டும்.

அபிநயம் அமைக்கும் பொழுது நாட்டிய முத்திரைகளைத் தவிர்ப்பது நன்று. அபிநயம் செய்யும்பொழுது முகபாவம் முக்கியமாக வெளிப்படுத்தப் பட வேண்டும். அப்பொழுதுதான் அபிநயப் பாடல் முழுமை நிறைந்ததாகக் காணப்படும். அபிநயப் பாடலை அபிநயத்தோடு கற்பிப்பதற்கு முன்பாக, ஆசிரியர் தாம் தெரிவுசெய்த பாடல் இலகுவான சந்தம், நடை கொண்டதாகத் தெரிவுசெய்வது நன்று. அதன் பிற்பாடு அப்பாடலில் வரும் கதையுடன் கருத்துக்களைத் தெளிவாக ஆசிரியர் மாணவர்களுக்குக் கூறவேண்டும். அதன்பிற்பாடே பாடலுக்கான அபிநயம் அமைக்கவேண்டும். அபிநயப்பாடலை மாணவர்களும் கற்பதன் மூலம் அவர்களிடம்

1. இரசிகத்தன்மை
2. கற்பனைத் திறன்
3. கருத்து வெளிப்பாட்டுத் திறன்போன்றவற்றை மாணவர்களிடத்தே ஏற்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிநயப்பாடலுக்கு அபிநயம் அமைக்கும் பொழுது கவனிக்க வேண்டியவை

- நல்லதொரு அபிநயப்பாடலைத் தெரிவு செய்தல்
- பாடல்கள் இயற்கை வர்ணனை, ஒழுக்கம், பழக்கவழக்கம், அன்பு, கருணை போன்ற விடயங்களைப் புலப்படுத்தி நிற்பதை உறுதிசெய்து கொள்ளுதல் அவசியம்.
- பாடலுக்கான சந்தம், தாளம், இசை இலகுவான முறையிலே அமைந்திருப்பது அவசியம்
- பாடல் புலப்படுத்தி நிற்கும் கதைகளை மாணவர்களுக்குச் சுவாரஸ்ய மாக விளக்கவேண்டும்.
- பாடலை நன்கு இரசனையோடு பாடுவதற்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.
- அன்றாட வாழ்க்கையிற் பயன்படுத்தும் அபிநயம், முகபாவம் போன்றவற்றை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கவேண்டும்.
- பாடலுக்குப் பரத நாட்டிய முத்திரையைப் பிரயோகிப்பதைத் தவிர்ப்பது மிகவும் நல்லது.
- பாடலுடன் அபிநயத்திற்கான பயிற்சியை வழங்கவேண்டும்.
- பாடலை ஆற்றுகை செய்யவேண்டும். ஆற்றுகை செய்வதனால் மாணவர்களிடையே கற்பனைத்திறன், இரசனைத்திறன், கருத்து வெளிப்பாட்டுத்திறன், சிந்திக்கும் திறன், குழுவாக இயங்கும் தன்மை ஆகியவற்றின் மூலம் சிறந்த ஆளுமை கட்டியெழுப்பப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவை

அப்பா ஒரு பாவைப்பிள்ளை வாங்கிவந்தாரே
அன்புடனே எனக்கு விளையாடத் தந்தாரே
கைகளிலே காப்பு மிட்டு மோதிரம் போட்டேன்
காதுக்குத்தித் தோடுமிட்டு மாலையும் போட்டேன்

சட்டையோடு தாவணியும் போட்டுவிட்டேன்
தலையிழுத்து நெற்றியிலே பொட்டுமிட்டேன்
கட்டிலிலே படுக்கவைத்துப் பாட்டுப் பாடினேன்
கம்பளியால் கவனமாகப் போர்த்து மூடினேன்

அம்மாவிடம் சோறுகறி வாங்கிச் செல்வேனே
ஆசையோடு பாவையிடம் நான்கொடுப்பேனே
அம்மா மெல்ல ஒழித்திருந்து பார்த்து கொண்டாளே
அன்புடனே என்னை வந்து அணைத்துக் கொண்டாளே.

**ஆக்கம் :**
*அமரர் பண்டிதர் கார்த்திகேசு*
*(சரவணமுத்து) இணுவில்*








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டாம்பூச்சி



பட்டாம் பூச்சி பட்டாம் பூச்சி
எங்கே போகின்றாய்
பறக்கும் போது என்னையும் - நீ
கூட்டிச் செல்வாயோ



என்ன என்ன மலர்களில் - நீ
தேன் எடுக்கின்றாய்
எங்கே சென்று அவற்றையெல்லாம்
சேர்த்து வைக்கின்றாய்
காணுகின்ற அதிசயங்கள்
கோடி இருக்குமோ
கதை கதையாய் எனக்குச் சொல்ல
நேரம் இருக்குமோ (பட்டாம் பூச்சி)



அந்திவானம் சிவப்பை யெல்லாம்
பூசிக் கொண்டாயோ
அழகுமலர் வண்ணமெல்லாம்
சேர்த்துக் கொண்டாயோ
கலர் கலராய்ச் சட்டை தைத்துப்
போட்டுக் கொண்டாயோ
காண்பவரின் கருத்தையெல்லாம்
கவர்ந்து சென்றாயோ (பட்டாம் பூச்சி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைப் போலப் பறந்துதிரிய
எனக்கும் ஆசைதான்
உலகம் எல்லாம் சுற்றிப் பார்க்க
எண்ணம் அதிகம் தான்
பாடமெல்லாம் கற்று நானும்
படித்து வைக்கிறேன்
பரீட்சை முடிந்து வந்திடுவேன்
கூட்டிச் செல்வாயோ



(பட்டாம் பூச்சி)

**ஆக்கம் :**
திருமதி த.சிதம்பரநாதன்
*(இசை விரிவுரையாளர்)*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னச் சின்னக் கன்றுக்குட்டி
சிறிய வெள்ளைக் கன்றுக் குட்டி
துள்ளி ஓடும் கன்றுக் குட்டி
சோம்பலில்லாக் கன்றுக்குட்டி
(சின்ன)

# கன்றுக்குட்டி

கட்டை நான்கு கால்களுண்டு
கள்ளமில்லா உள்ளமுண்டு
பட்டு மேனி வாலுமுண்டு
பார்க்க அழகு கன்றுக்குட்டி
(சின்ன)

அம்மா அம்மா என்று நீயும்
அழுவ தேனோ கன்றுக்குட்டி
அம்மா சும்மா பால் தருவா
அருகில் வா என் கன்றுக்குட்டி
(சின்ன)



**ஆக்கம் :**
திருமதி த.சிதம்பரநாதன்
*(இசை விரிவுரையாளர்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னச் சின்னப்பாலர்

சின்னச் சின்னப் பாலர் ஒன்று சேர்ந்து
சிங்காரமாய்ப் பேசி நடைநடந்து
காலை வேளை தோறும் சென்று
கல்விச் சாலையில் கற்றிடுவோம்
கலைகள் பல அறிந்திடுவோம்
கற்று அதை மகிழ்ந்திடுவோம்
களங்க மற நாட்டினில்
வாழ்ந்திடுவோம்.



அஞ்சாமலே எடுத்துச் சொல்லி
ஆடல் பாடல் ஆடிடுவோம் (சின்னச்)

அக்கம் பக்கமே பாராமல்
நாம் ஆட்டம் போடவும் கூடாது
அழுவதும் தவறு அஞ்சுவதும் தவறு
எது வந்த போதிலும்
எதிர்த்து நிற்போம்.



அஞ்சாமலே எடுத்துச் சொல்லி
ஆடல் பாடல் ஆடிடுவோம் (சின்னச்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் வடிவமாம் அன்னை தந்தை

முன் ஆன்றோர் வார்த்தைகள் சொல்லித் தந்தார்

இனிய உணவு ஊட்டியே

இன்புற வழி காட்டியே

அன்பு தரும் தெய்வங்கள் அன்னை தந்தை

அஞ்சாமலே எடுத்துச் சொல்லி

ஆடல் பாடல் ஆடிடுவோம். (சின்னச்)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


டக்டக் சத்தம் போடுமாம்
நாலு காலால் ஓடுமாம்
கொள்ளும் புல்லும் தின்னுமாம்
குதித்து குதித்து செல்லுமாம்
(டக் டக்)



# குதிரைப் பாட்டு

ஈ ஈ என்று கனைக்குமாம்
கிட்டப் போனால் உதைக்குமாம்
வண்டி இழுக்க உதவுமாம்
வாலைச் சுழட்டி ஆட்டுமாம்
(டக் டக்)

சண்டித் தனமும் செய்யுமாம்
சவுக்கால் அடியும் வாங்குமாம்
அந்த மிருகம் என்ன வாம்
அதுவே குதிரை குதிரையாம்
(டக் டக்)



**ஆக்கம் :**
அருட்சகோதரி யதீஸ்வரி
(துர்க்கா புரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பா பாட்டு



பாப்பா நான் ஒரு கதை சொல்வேன்
    கேட்கா விட்டால் நான் நில்லேன்
அப்பா நேற்றுப் பட்டணம் போனார்
    அங்கே நல்லொரு பாவையைக் கண்டார்
காசு குடுத்ததை வாங்கி வந்தார்
    ஆசையுடன் விளையாடத் தந்தார்
சட்டை போட்டேன் தாவணி போட்டேன்
    சாந்துப் பொட்டும் நெற்றியில் போட்டேன்
காப்புப் போட்டேன்
    சங்கிலி போட்டேன்
காதில் குணுக்கியும் தோடும் போட்டேன்
    சும்மா கொஞ்சப் பாலும் விட்டுப்
போச்சியோடு குடிக்கவைத்தேன்
    அம்மா என்னைக் கண்டாளே
அணைத்து முத்தம் தந்தாளே.



**ஆக்கம் :**
*பண்டிதர் கார்த்திகேசு*
*(இணுவில்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூந்தோட்டம்

நல்ல பறவைகளின் கூட்டம்
நாடி வருவதெங்கள் தோட்டம்
எல்லோருமே விரும்பும் எவ்வளவு பூக்களுண்டு
மெல்ல அவற்றை நாங்கள் கொய்வோம்
வேண்டிய நல்ல மாலை செய்வோம்
ட ட ட ட ட ட ட
ட ட ட ட ட ட ட
வெள்ளைக் கன்று வாலைத் தூக்கித்துள்ள
மேவு மணி கிண் கிண் ஓசை கொள்ள
புள்ளிமயில் கூத்து மாட
பூங்குயில்கள் கீதம் பாட
அள்ளிக் குடிக்க ஆசை கொள்வோம்
ஆனந்தமாய் நாங்கள் செல்வோம்
ட ட ட ட ட ட ட
ட ட ட ட ட ட ட



**ஆக்கம் :**
பண்டிதர் கார்த்திகேசு
(இணுவில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்டார் கார்

அப்பா எனக்கொரு மோட்டக்கார்
வாங்கித் தா
அதிலே நான் ஏறி ஆனந்தமாய்
ஓடுவேன்
தப்பாமல் உனையும் கூட்டிக் கொண்டு
போவேன்
தம்பியையும் கூட நான் ஏத்திக் கொண்டு
போவேன்
பொப்போம் பொப்போம் போம் மோட்டாக்கார்
வாங்கித் தா
அதிலே நான் ஏறி ஆனந்தமாய்
ஓடுவேன்
பள்ளிக்கூடம் போவேன்
பாடங்களும் படிப்பேன்
பல்கலை கற்பேன்
பட்டங்கள் பெறுவேன்
பொப்போம் பொப்போம் போம்
மோட்டார்க்கார் வாங்கித்தா
அதிலே நான் ஏறி ஆனந்தமாய்
ஓடுவேன்.



**ஆக்கம் :**
*ந.கந்தசாமி ஐயர்*
*(இணுவில்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொம்மை



சின்னச் சின்ன பொம்மை சிறிய நல்ல பொம்மை
என்ன வேண்டும் சொல்லேன் - ஏனோ பேசவில்லை

காலுங்கையும் ஆட்டிக் கண்சிமிட்டும் பொம்மை
கோல அழகு கண்டு கொஞ்சிவிட்டேன் உன்னை

லா .......லா .......லா .......லா
லா .......லா .......லா .......லா

பட்டுச்சட்டை தாரேன் பஞ்சணையும் தருவேன்
பொட்டுமிட்டு விடுவேன் புன்சிரிப்பை பாரேன்
ஏணைகட்டி விடுவேன் உறங்கி நீயும் பாரேன்
தாலாட்டுப் பாடி தூங்க வைப்பேன் உன்னை

ஆராரோ ஆரிரரோ ஆரிரரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ ஆரிரரோ ஆரிரரோ



அண்ணா உன்னை அடிக்கமாட்டான்
அழாமல் தூங்கி விடு
கண்விழித்து பார்த்தவுடன்
கட்டி முத்தம் தந்திடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா உன்னை அணைத்திடுவாள்
அமுதும் ஊட்டி வளர்த்திடுவாள்
மாலை நேரம் வந்தவுடன்
மாமா வீட்டுக்குத் தூக்கிச் செல்வேன்

லா ........லா ........லா ........லா
லா ........லா ........லா ........லா



தலையை வாரிப் பின்னிடுவேன்
தலைக்கு மாலை சூட்டிடுவேன்
பாலும் பழமும் தந்திடுவேன்
பச்சைக் குழந்தை அழவேண்டாம்.

பலூனும் பந்தும் நான் தருவேன்
பந்து விளையாடிடுவோம்
அம்புலி மாமா காட்டிடுவேன்
வெம்பி வெம்பி அழவேண்டாம்



லா ........லா ........லா ........லா
லா ........லா ........லா ........லா

சின்னப் பொம்மை நீயல்லவோ
என் கண்மணி நீ யல்லவோ
வண்ணப் பொம்மை நீயல்லவோ
என்னை விட்டுப் போகாதே
என்னை விட்டுப் போகாதே

**ஆக்கம் :**
*திருமதி வை.கணேசபிள்ளை (பண்டிதர்)*
*(ஓய்வு பெற்ற ஆசிரியர், இணுவில்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இயற்கைக்காட்சி



அன்றொரு நாள் அப்பாவோடு
கொழும்புக்குச் சென்றேன்

அன்புத் தங்கை அன்பரசி
என்னுடன் வந்தாள்



புகைவண்டிப் பிரயாணம்
நல்லாயிருந்தது

நடுக் காட்டில் நின்ற பின்பு
நடுக்கம் வந்தது

அங்கே கண்ட காட்சியினால்
நடுக்கம் பறந்தது



பச்சைக் கிளி கூட்டம்
ஒன்று பழம் பறித்தது

இச்சைகொண்ட மற்றக் கிளிகள்
கீ கீ என்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீல மயில் தோகை விரித்து
ஆடி நின்றது

கோலமயில் அழகைக் கண்டு
கொக்கும் பார்த்தது

வானமெல்லாம் இருட்டிக் கொண்டு

மின்னிப் பார்த்தன
கொள்ளையான குயில் கூட்டம்
கூ கூ என்றன



குந்தி மரத்திலிருந்த மந்தி
குதித்து குதித்து பார்த்தது

புற்றிற் பாம்பு எழும்பி நின்று
படமெடுத்தது

சுற்றி வந்து கண்ணை
மின்னி என்னோ செய்தது

பற்றி எம்மை இழுத்துக் கொண்டு
வண்டி சென்றது.




**ஆக்கம் :**
*திருமதி.வை.கணேசபிள்ளை (பண்டிதர்)*
*(ஓய்வு பெற்ற ஆசிரியர், இணுவில்)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமா வீட்டு முற்றத்திலே
மாமரம் ஒன்று நிற்கின்றது
பொன்னைப் போலே பூப்பூக்கும்
பூக்களினுள்ளே பிஞ்சிருக்கும்



# மாம்பழம்

பச்சை மணி போலே காய்காய்க்கும்
பவளம் போலே பழம் பழுக்கும்
அணில் பிள்ளை வந்து கொந்தாமல்
அடிப்பேன் மணியைப் பிந்தாமல்



இன்றைக்கு மாமா சுவப்பிட்டார்
இனிப்பான பழம் தந்தார் சாப்பிட்டேன்
பொய் சொல்ல மாட்டேன் எப்போதும்
கையை மணந்து பார் இப்போது



**ஆக்கம் :**
பண்டிதர் கார்த்திகேசு
(சரவணமுத்து ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா தந்த பட்டுக்குடை
அழகாயிருக்கும் வட்டக்குடை
பட்டுக் குஞ்சம் போட்டிருக்கும்
பல நிற மணிகள் கோர்த்திருக்கும்

# பட்டுக்குடை

வெய்யிலும் என்னைச் சுடமாட்டாது
மழையும் என் மேற் படமாட்டாது
படக்கென குடையை விரிப்பேனே
பள்ளிக் குடமும் செல்வேனே



**ஆக்கம் :**
பண்டிதர் கார்த்திகேசு
இணுவில்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைக்குட்டி

நான் வளர்க்கும் பூனைக்குட்டி வெள்ளைக் குட்டியே
அதைநன்கு விளையாடவிட்டேன் மணிகட்டியே
தானும் என்னைப் போல பந்தைத் தட்டித் தட்டியே
மெல்லத் தள்ளி விளையாடும் எட்டிஎட்டியே

பசிவந்தால் மியா மியா என்று கத்துமே
பசும்பாலை வைத்தால் கண்ணை
மூடிக் கொண்டு நக்குமே
எலி கிட்ட வந்தாலும் தொட்டிடாதே அது
ஏனென்றால் மிகச் சின்னக் குட்டிதானே

**ஆக்கம் :**
பண்டிதர் கார்த்திகேசு
இணுவில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம் ஏற்றல்

எட்டுமூலைப் பட்டம் கட்டிடவே நாமும்
ஏகிக் கயிற்றை ஏந்திடுவோம்
வெட்டவே கத்தரிக்கோலும் கடதாசி
வேண்டும் சலாகையும் தேடிடுவோம்



நாலு மணிக்கும் கொடி விடவே நாமும்
நன்கு வயலுக்குச் சென்றிடுவோம்
வாலும் பெரிதாய் முடிந்திடுவோம் அங்கு
வாகாச் சோழகம் வீசுது பார்

மெல்லக் கயிற்றை விட்டுப் பிடியப்பா
வேகமாய்க் காற்று வீசும் போது
கல்லுத் தட்டாமலே ஓடிடு பின்னுக்கு
கயிற்றை இழுத்துப் பிடித்துக் கொண்டு

**ஆக்கம் :**
பண்டிதர் கார்த்திகேசு
இணுவில்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்க்குட்டி

நான் வளர்த்த பப்பி நாய்க்குட்டியை
இன்னும் நான்கு நாளாகவே காணவில்லை
யார் கொண்டு போனாரோ நான் அறியேன்
அதை எண்ண அழுகை வருகுதம்மா

வார் மாட்டினேன் சிறு சங்கிலி பூட்டினேன்
வாசலில் மெத்தையும் நான் போட்டேன்
யார் கொண்டு போனாரோ நான் அறியேன்
அதை எண்ண அழுகை வருகுதம்மா

பால் குடிக்கச் சொன்னால் பால் குடிக்கும்
முன்னம் கால் போடச் சொன்னால் கால் போடும்
சின்னவாலை ஆட்டிக் கொண்டு
வந்து விளையாடும்
வாவென்றால் வந்தெனைக் கொஞ்சும் அம்மா

(நான்)



**ஆக்கம் :**
பண்டிதர் கார்த்திகேசு
இணுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுவோம் பாடுவோம் பாடிப்பாடி ஆடுவோம்
நாடிடுவோம் நல்லதையே
நாங்கள் இனிய மழலைகள்
நல்ல இன்பக் குழந்தைகள்!

## இனிய உலகம் படைத்திடுவோம்

அம்மா அப்பா ஆசிரியர் எங்களது இனியவர் (கள்)
சும்மா சோம்பல் தவிர்த்திடுவோம்
சுத்தமாக வாழ்ந்திடுவோம்
சுதந்திரமாய் மகிழ்ந்திடுவோம்

நல்லதை நாம் கற்றிடுவோம் நல்லவற்றைச்
செய்திடுவோம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்ல கணணி அறிவினோடு
வளரும் கல்வி கற்று நிதம்
வரும் காலம் வென்றிடுவோம்

எல்லோருடனும் அன்பான எழில்
உறவை வளர்த்திடுவோம்
எல்லா நலமும் எமக்கருளும்
இறைவனை நாம் வணங்கிடுவோம்
இனிய உலகம் படைத்திடுவோம்

**ஆக்கம் :**
*க. ரட்ணேஸ்வரன்*
*கல்வியியலாளர்,*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புயல் மழை - நிஷா



அழகாய்த் தெரியும் வானமது
ஒரு நாள் இருண்டுபோனது
நிறையக் காற்றும் வீசியது
நிற்காது மழையும் பெய்தது

பெரிய மரங்கள் வீழ்ந்தன
பொருட்கள் பலவும் அழிந்தன
வயல் நிலம் எல்லாம் மூழ்கின
வண்ண வீதிகள் நிரம்பின

கடதாசிக் கப்பல் விட்டு (நாம்)
விளையாடும் மழைவெள்ளம் (கூடி)
அடடா எம் வீட்டிற்குள்ளே
புகுந்து கண்டு பயந்தோமே



நாங்கள் இன்னோர் இடம் போனோம்
அங்கு நிறைய வெள்ளமில்லை
அங்கே இருந்தோம் சிலநாட்கள்
மீண்டும் வந்தோம் (எம்) வீட்டிற்கு

அந்தக் காற்றும் மழையதுவும்
அழிக்கும் சூறாவளி அதுவாம்
இதைப் போல் எமக்கினி பயம்வேண்டாம்
இறைவா நீயேதுணை எமக்கு

**ஆக்கம் :**
*க. ரட்ணேஸ்வரன்*
*கல்வியியலாளர்,*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா இலங்கையில் முன்னணி இசைக்கலைஞர்களுள் ஒருவராகவும், யாழ்ப்பாணம் இராம நாதன் நுண்கலைப்பீடத்தில் கடமையாற்றிய இந்தியா, இலங்கையில் பிரசித்திபெற்ற இசைவல்லுனர்களிடமும் நான்குவருடம் கர்நாடக இசையை முறையாகப் பயின்று இசைக்கலைமணி என்னும் பட்டத்தைப் பெற்றவர். அத்தோடு இசைக்கலாவித்தகர், பட்டப்பின் கல்விடிப்ளோமா, பண்பாட்டியல் முதுகலைமானிப் பட்டங்களையும் பெற்றவர். 17.08.1988 இல் இருந்து 2000ஆம் ஆண்டுவரை ஆசிரியராகவும் 01.05.2000ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை தேசியகல்வியியற் கல்லூரியில் இசைத்துறை விரிவுரையாளராகவும் கடமையாற்றிவருகின்றார்.

இரசிகர்களைக்கவரும் தமது குரல்வளத்தால் பல இசைக்கச்சேரிகள், நாட்டிய நாடகங்கள், நடனநிகழ்வுகளுக்குப் பாடிப்பலரது பாராட்டுக்களைப் பெற்றதோடு, இராமநாதன் நுண்கலைக்கல்லூரியின் நாட்டிய நாடகப் போட்டிகள், நடனப்போட்டிகள் தேசிய மட்டத்தில் தமது சாதனைகளைப் படைப்பதற்கு ஊன்று கோலாக விளங்கியவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறையில் வருகை நேரவிரிவுரை யாளராகவும், பரீட்சை மதிப்பீட்டாளராகவும் தமது சேவையை நல்கியவர். சுவிஸ் நாட்டில் நடைபெறும் இசைப் பரீட்சைகளுக்குப் பரீட்சகராகச் சென்று கடமை புரிந்துள்ளார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பமாகிய காலத்தில் இசையில் முதலாவது, விரிவுரையாளராக இணைந்து கொண்டதோடு, இன்றுவரை இசைத்துறை வளர்ச்சிக்காக பல்பரிமாணங்களில் தமது சேவையை வழங்கி எட்டு அணி மாணவர்களை சமூகத்திற்கு கையளிப்புச் செய்துள்ளார். இத்தகைய அளப்பரிய சேவையாளர் அபிநயப் பாடல் தொகுப்பை ஆக்கியுள்ளார். இந்நூல் ஆசிரியர்களுக்கும், இசை ஆர்வலர்களுக்கும் பெரிதும் பயன்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இந்நூலாசிரியர் மேலும் பல நூல்களை ஆக்கி,வெளியிடுவதோடு பல இறுவெட்டுக்களையும் வெளியிட வேண்டும் என்று பாராட்டுவதோடு இறையாசியோடு இப்பணியில் நீண்டகாலச் சேவையாற்றவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

திருமதி ஞானசக்தி கணேசநாதன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

Harikanan Jaffna
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org